සමෘද්ධි සංවර්ධන
දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Samurdhi Development**

සමාජ සවිබලගැන්වීම, සුබසාධන හා කන්ද උඩරට උරුමය පිළිබඳ අමාත්‍යාංශය
சமூக வலுவூட்டல் நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு
MINISTRY OF SOCIAL EMPOWERMENT, WELFARE AND KANDYAN HERITAGE


මගේ අංකය / எனது இல / My No: DSD/HO/MF/BR/05
ඔබේ අංකය / உமது இல / Your No: ..........
දිනය / திகதி / Date: 2018.02.01

சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர்கள் மற்றும்,
வங்கிச் சங்க முகாமையாளர்களுக்கும்.

சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களின் பதிவுகளை
<u>புதுப்பித்துக்கொள்ளல்</u>

சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களின் பதிவுகள் தொடர்பாக வெளியிடப்பட்ட மேற்படி சம இலக்கம் கொண்ட ச.ச.அ.வங்கி 2017/16 இலக்க 2017.03.17ம் திகதிய கடிதத்துக்கமைவாக

2. இச் சுற்றுநிருபக் கடிதத்தினூடாக சமுர்த்தி வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களின் கட்டுப்பாட்டுச் சபை, நிறைவேற்றுச் சபை ஆகியவற்றை நியமிப்பது மற்றும் சமுர்த்தி வங்கி, வங்கிச் சங்கங்களை பதிவு செய்துகொள்வதற்கான ஆலோசனைகள் என்பன வழங்கப்பட்டிருந்தது. சமுர்த்தி வங்கி நடவடிக்கைகள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 2017 மார்ச் 07ம் திகதிய 2009/08 இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய சமுர்த்தி வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்கள் அனைத்தும் ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் 31ம் திகதிக்கு முன்னரான 30 நாட்களுக்குள் பதிவினை புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.

3. இதற்கமைய தாங்கள் <u>2018 பெப்ரவரி 28ம் திகதிக்கு முன்னர் சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் பதிவினை புதுப்பித்துக்கொள்வதற்கான விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.</u> சமுர்த்தி வங்கி மற்றும் வங்கிச் சங்கத்தின் பதிவினை புதுப்பித்துக்கொள்வதற்கான கட்டணம் ரூபா 1000/= ஆகும். இதற்கான காசோலையினை "முகாமையாளர் இலங்கை வங்கி பத்தரமுல்லை முதலீட்டுக் கணக்கு – 3417925 வரவு வைக்க" அனுப்பி வைத்தல் வேண்டும். இப் பதிவு புதுப்பித்தல் கட்டணம் சமுர்த்தி வங்கிகளில் குறியீட்டு 2141 கணக்கிலும் வங்கிச் சங்கச் சங்கங்களில் குறியீட்டு இலக்கம் 6213 இலும் பற்று வைத்தல் வேண்டும்.

4. பதிவினை புதுப்பிப்பதற்கான விண்ணப்ப படிவம், சமுதாய அடிப்படை அமைப்புக்களின் விபரங்கள், பொதுச்சபைக் கூட்டம் மற்றும் கட்டுப்பாட்டுச் சபைத் தகவல்கள், நிதிநிலைக் கூற்று, வருமானக் கூற்றுக்களின் தகவல்கள் அடங்கிய படிவத்தினை சமுர்த்தி இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து பெற்றுக்கொள்ளல் வேண்டும். சமுதாய அடிப்படை அமைப்புக்களின் தகவல்களை வழங்கும் போது அனைத்து சமுதாய அமைப்புக்களினதும் தகவல்களை மீண்டும் வழங்குவது தேவையற்றது என்பதுடன் மாற்றம் செய்யப்பட்டுள்ள தகவல்களை மாத்திரம் அனுப்பி வைப்பது போதுமானதாக அமையும்.

5. இப் பதிவு புதுப்பித்தலுக்கான விண்ணப்பப் பத்திரத்தை சமர்ப்பிப்பதற்கு முன்னர் 2018ம் ஆண்டுக்கான சமுர்த்தி வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களுக்கான கட்டுப்பாட்டுச் சபை மற்றும் நிறைவேற்றுக் குழுவினை தெரிவு செய்துகொள்ளல் வேண்டும். அதற்கமைய இப் புதிய


1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල, 1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General | අධ්‍යක්ෂ (මානව සම්පත්) / பணிப்பாளர் ( மனிதவளம்) / Director (Human Resource) | ප්‍රධාන ගණකාධිකාරී / பிரதான கணக்காளர் / Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) / பணிப்பாளர் (குறு நிதி ) / Director ( Micro Finance) | කාර්යාලය / அலுவலகம் / Office |
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | Hot Line :0112-889007 | | Hot Line:0112-885582 | Hot Line: 011- 2[illegible] |

கட்டுப்பாட்டுச் சபை, நிறைவேற்றுக் குழுவின் தலைவர் மற்றும் செயலாளரின் ஒப்பத்துடன் விண்ணப்ப பத்திரத்தை சமர்ப்பித்தல் வேண்டும். மேலும் கட்டுப்பாட்டுச் சபை, நிறைவேற்றுக் குழுவினை தெரிவு செய்வதற்காக நடாத்தப்பட்ட கூட்டத்தின் கூட்டறிக்கையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியினை தலைவர், செயலாளர்களின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரையுடன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

6. எவ்வாறு இருப்பினும் 2018.02.10ம் திகதியில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் காலத்தினுள் பொதுச்சபைக் கூட்டத்தினை நடாத்துவதில் ஏதும் அசௌகரியங்கள் காணப்படின் பெப்ரவரி 10ம் திகதிக்கு பின்னர் உரிய பொதுச்சபைக் கூட்டங்களை நடாத்தி பதிவினை புதுப்பிப்பதற்கான விண்ணப்பபடிவத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

7. 2017.12.12ம் திகதியில் எனது சம இலக்கத்தின் கீழ் வெளிடப்பட்ட சமுர்த்தி வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களின் கட்டுப்பாட்டுச் சபையினை தெரிவு செய்தல் தொடர்பான கடிதத்தில் 2018.03.31ம் திகதி வரை பொதுச்சபைக் கூட்டத்தினை நடாத்துவதற்கான வழங்கப்பட்டிருந்த திகதி இதன் பிரகாரம் மாற்றம் செய்யப்படுவதுடன் 2018.02.28ம் திகதிக்கு முன்னர் வங்கி, வங்கிச் சங்கங்களின் பொதுச்சபைக் கூட்டத்தினை நடாத்தி பதிவினை புதுப்பிப்பதற்கான விண்ணப்பபடிவத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

8. தங்களது சமுர்த்தி வங்கி மற்றும் வங்கிச் சங்கத்திற்குரிய பதிவிலக்கம் மற்றும் பதிவு செய்யப்பட்ட திகதி என்பன சமுர்த்தி இணையத்தளத்தில் காட்சிப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளது.

9. கடந்த ஆண்டு பதிவுக்கான விண்ணப்ப படிவங்களை சமர்ப்பிக்கும் போது அதில் கீழ்வரும் குறைபாடுகள் காணப்பட்டிருந்தன.

1. உரிய தினத்திற்குள் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படாமை
2. உரிய உத்தியோகத்தர்களின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை என்பன இல்லாமை
3. கௌரவ தலைவர்களின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரைகள் என்பன இல்லாமை
4. முழுமையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் இணைப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை

எனவே மேற்படி குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கு மிகக் கூடுதலான கவனத்தை செலுத்தி உரிய தினத்திற்கு முன்னர் பதிவினை புதுப்பிப்பதற்கான விண்ணப்பபடிவத்தை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தங்களை வினயமுடன் வேண்டுகிறேன்.

கலாநிதி. சுனில் ஜயந்த நவரத்ண
பணிப்பாளர் தலைமையதிபதி

பிரதிகள்:-

1. செயலாளர் - சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு - தகவலுக்காக
2. மாவட்ட செயலாளர் / மாவட்ட மேலதிக பணிப்பாளர் நாயகம் - தகவலுக்காக
3. மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் - தகவலுக்காக, உ.நட
4. பிரதேச செயலாளர் - தகவலுக்காக
5. சகல பணிப்பாளருக்கும் (ச.அபி.தி) - தகவலுக்காக
6. பிரதம உள்ளக கணக்காய்வாளர் - தகவலுக்காக உ.நட

TRANSLATED BY – LALIYAR